செய்தி வெளியீடு எண். 970 நாள். 15.12.2009

# ஐந்தாம் கட்டமாக மேலும் 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்!

## 17 நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்திட முதலமைச்சர் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரநிதிகள் குழு ஒப்புதல்!

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை நான்கு கட்டங்களில் 2 ஆயிரத்து 678 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1 கோடியே 12 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட அனுமதிக்கப்பட்டு, இதுவரை 2 ஆயிரத்து 195 கோடியே 38 இலட்சத்து 95 ஆயிரத்து 865 ரூபாய் செலவில் 91 இலட்சத்து 99 ஆயிரத்து 65 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, 5.11.2009 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் கூட்டத்தில் ஐந்தாம் கட்டமாக மேலும் 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட முடிவு செய்யப்பட்டது.

இதன்பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் முன்னிலையில் 9.12.2009 அன்று மாலை 4.30 மணி அளவில் மேலும் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (14 அங்குல அளவு) கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப் பெற்றன. அதில் 20 நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் இருந்தன.

இந்த ஒப்பந்தப்புள்ளி உறைகள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான, சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு மற்றும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்பட்டு அவ்வுறையில் உள்ள ஆவணங்கள் முதல் நிலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த முதல் நிலை ஆய்வில் 20 நிறுவனங்களும் தகுதி பெற்றன.

விரிவான ஆய்வுக்குப்பின், 17 நிறுவனங்கள் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை முழுவதுமாக நிறைவு செய்ததால் அடுத்த கட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டன.

ஸ்ரீகுமார் டிரேடிங், தேவி மினரல் ரிசோர்சஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் அருணாசலா இம்பெக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகிய 3

நிறுவனங்கள், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை முழுமையாக பூர்த்தி செய்யாததால், இந்நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப் பட்டன.

தகுதி பெற்ற மீதமுள்ள 17 ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகள் (Price Bids) இன்று 15.12.2009 (செவ்வாய்க் கிழமை) காலை 10.30 மணியளவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு உறுப்பினர்களாகிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் (திமுக), சட்டமன்ற கட்சிகளின் தலைவர்கள் திரு. டி. சுதர்சனம் (காங்கிரஸ்), திரு. வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), பூவை திரு. மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அப்துல் பாஸித் (முஸ்லிம் லீக்), திரு. து. ரவிகுமார் (விடுதலை சிறுத்தைகள்) மற்றும் ஒப்பந்ததாரர்கள் / ஒப்பந்ததாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்பட்டன.

குறைந்த விலைப்புள்ளி (L1) குறிப்பிட்ட திருவாளர்கள் க்ளியர் விஷன் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் பீ.ஜீ. இன்டர்நேஷனல் ஆகிய இரண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி, தொலைக்காட்சிப் பெட்டிக்கான இறுதி விலையாக 2,061 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ஒரு வண்ணத் தொலைக்காட்சி பெட்டியின் விலை ரூ.2061 என்ற அடிப்படையில்:

(1) கிளியர் விஷன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;

(2 பி.ஜி. இண்டர்நேஷனல் நிறுவனத்திடமிருந்து 8 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;

(3) சன்டெக் விஷன் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சத்து 50 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;

(4) ஈஸ்ட் இந்தியா டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 4 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;

(5) மல்கோத்ரா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சத்து 50 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;

(6) டிக்சன் டெக்னாலஜீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 4 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;

(7) பெல்டெக் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;

**(8) கெவின் இன்போடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(9) எல்.பி. எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து 50 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(10) ஜீனஸ் எலக்ட்ரோடெக் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 4 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(11) கெயில் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(12) வீடியோகான் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 3 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(13) டிரென்ட் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(14) ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(15) சலோரா இண்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 50 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(16) எம்.ஐ.ஆர்.சி. எலெக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும்;**

**(17) எல்.ஜி. எலெக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும்**

**ஆக ஐந்தாம் கட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்திற்காக மொத்தம் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென இன்றைய கூட்டத்தில் (15.12.2009) ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.**

*********

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**